அசல் வழக்கு எண். 188/2021 வா.சா.1 ரகு த/பெ ஆனந்தராஜ்

**<u>08.08.2023 குறுக்கு விசாரணை தொடர்ச்சி....</u>**

9. பிரதிவாதியை 15ம் மேற்பட்ட பெண்கள் வழிமறித்து நடு வீதியில் உட்காரவைத்து மறியல் போராட்டம் ஸ்ரீராம்நகரில் நடத்தியதாக பதிலுரையில் சொல்லி உள்ளேன் என்றும் அவ்வாறு நடந்ததாக சொல்லப்பட்ட சம்பவம் நடந்த தேதி என்னவென்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு போராட்டம் நடத்தியது சம்மந்தமாக ஆரணி நகர காவல் நிலையம் அல்லது ஆரணி கிராமிய காவல் நிலையம் சம்மந்தப்பட்டவர்கள் யாரும் யாரையும் கைது நடவடிக்கை மேற்கொண்டார்களா என்றால் இல்லை. மேற்சொன்ன 15க்கும் மேற்பட்ட பெண்கள் பிரதிவாதி மீது காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அந்த 15 பெண்கள் யாரையும் இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

10. பிரதிவாதி என்ன அரசு வேலை செய்கிறார் என்றால் சத்துணவு உதவியாளராக உள்ளார். வழக்கு தாக்கல் செய்தபோது இரும்பேடு சத்துணவு துறையில் வேலை செய்தார். தற்போது எங்கு வேலை செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி சத்துணவு துறையில்தான் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான்.

11. பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். அவ்வாறு பிரதிவாதி அறிவிப்பை பெற்றதற்கான அஞ்சல் அறிக்கை சான்று எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

12. பிரதிவாதி தனது பதிலுரையில் என்னை யார் என்று தெரியாது என்றும், காமாட்சி என்பவருக்காக பொறுப்புக்காக கையெழுத்து போட்டதாக என்னிடம் எந்த தொகையும் பிரதிவாதி கடனாக பெறவில்லை என்றும் சொல்லி உள்ளார் என்றும் அதனால் அந்த காமாட்சியை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

13. பிரதிவாதியின் வீட்டிற்கு நான் மேல் பூட்டு போட்டது சம்மந்தமாக காவல் கண்காணிப்பாளரிடம் பிரதிவாதி புகார் செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த புகார் மாவட்ட துணை கண்காணிப்பாளரிடம் அனுப்பி வைக்கப்பட்டது என்றும் அவர்களை விசாரணை செய்தால் உண்மை தெரிய வரும் என்றால் சரிதான். பிரதிவாதியை நான் 11.00 மணி வரை என் வீட்டில் இருக்க வைத்து கொடுமைப்படுத்தியதாக காவல் துணை கண்காணிப்பாளரிடம் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

14. வழக்கு கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதியின் குடும்ப உறுப்பினர்கள் யாரிடமாவது நான் கையெழுத்து வாங்கினேனா என்றால் இல்லை வெளிநபர்கள்தான் கையெழுத்து போட்டார்கள். பிரதிவாதியின் மருத்துவ செலவிற்காக கடன் கொடுத்ததாக கடனுறுதிச்சீட்டில் உள்ளது. அந்த மருத்துவ செலவு என்னஎன்று வழக்கில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா பெயர் ஆனந்தராஜ் ஆகும். நான் ஞானஸ்தானம் செய்து என் பெயரை ராபர்ட் என்று மாற்றி விட்டேன் என்றும் அதனால்ஆள் மாறாட்டம் செய்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல. என்னை ராபர்ட் என்று அழைப்பார்கள். விதவையான பிரதிவாதியை மிரட்டி பணம் பறிப்பதற்காக தாக்கல் செய்துள்ள இந்த பொய் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.